தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 135/மா/2021**

**நாள் : 10.03.2022**

திரு. எம். தேவேந்திரன்,
கோயம்புத்தூர். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

செயற்பொறியாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி. – எதிர்மனுதாரர்கள்

கோயம்புத்தூர் மாவட்டம், உருமாண்டம்பாளையம், ஜீவா வீதி, எண்.9/129 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. எம்.தேவேந்திரன் அவர்களின் 23.10.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.10.2021-ல் பெறப்பட்டு 135/2021 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கோயம்புத்தூர் மாவட்டம், உருமாண்டம்பாளையம், ஜீவா வீதி, எண்.9/129 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. எம்.தேவேந்திரன் என்பவர் தனது முறையீட்டு மனுவில், கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்.

1. கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட கோயம்புத்தூர் வடக்கு வட்டம், வெள்ளக்கிணறு கிராமம் க.ச. 354 மற்றும் 365 ஆகிய நிலங்களில் சுடுகாடு அமைந்துள்ளது.

2. மேற்படி வெள்ளக்கிணறு கிராமம் க.ச.எண்.364–ல் வண்டிப்பாதை, கழிவறை, போர்வெல் மற்றும் சில வீடுகள் அமைந்துள்ளது. மேற்படி க.ச.எண்ணில் ஒரு மழைநீர் தேங்கும் குட்டையும் அமைந்துள்ளது. அதற்கான வரைபடம் மற்றும் சிட்டா ஆகியவற்றின் ஜெராக்ஸ்

நகலை இப்புகார் மனுவுடன் இணைத்துள்ளேன். மேற்படி புறம்போக்கு நிலத்தில் வருவாய்த்துறையில் பணிபுரியும் ஊழியர்கள் சிலர் தங்களது பெயர்களுக்கு பட்டா பெற்றதாக உண்மை வரைபடத்தில் மாற்றம் செய்து நிலத்தை ஆக்கிரமிப்பு செய்யும் எண்ணத்தில் ஆவணங்களை திருத்தியுள்ளனர்.

3. மேற்கண்ட க.ச.எண்.364–ல் வெள்ளக்கிணறு பேரூராட்சியாக இருந்த காலத்தில் மேற்படி நிலத்தில் ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டு தண்ணீர் எடுக்கப்பட்டது. மேற்படி போர்வெல் கிணற்றிலிருந்த மின் மோட்டாரை யாரோ அகற்றிவிட்டனர். பின்னர் அந்த ஆழ்குழாய், மண்கொட்டி கிணறு மூடப்பட்டுள்ளது. அவ்வாறு அந்த ஆழ்குழாய் கிணறு மூடப்பட்ட பின்னர், உருமாண்டம்பாளையம் ஊர்ப்பொதுமக்களால் குட்டை, சுடுகாடு ஆகியவற்றினை பயன்படுத்த சென்று வந்த பாதையை ஒரு சிலர் ஆக்கிரமித்து கட்டிடம் கட்டுவது தொடர்பாக கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு 14.05.2021ம் தேதியன்று புகார் மனு ஒன்றைக் கொடுத்திருந்தேன். அந்தப்புகார் மனு மீது நடவடிக்கை எடுத்த கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள், கோயம்புத்தூர் வடக்கு வருவாய் கோட்டாட்சியரை நடவடிக்கை எடுக்க பணித்ததின் பேரில் கோயம்புத்தூர் வடக்கு வருவாய் கோட்டாட்சியர் அவர்களும் நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், 1–ம் எதிர்மனுதாரர் அவசரகதியில் மனுதாரருக்கு எவ்வித தகவலும் தராமல் ஊர்ப்பொதுமக்களுக்கும் தகவல் தெரிவிக்காமல் வெள்ளக்கிணறு கிராம நிர்வாக அலுவலகத்தில் பணிபுரியும் கிராம அலுவல் உதவியாளர்கள் (தாவா நிலத்தில் போலியாக தமக்கு பட்டா உள்ளதாக கூறி வருபவர்) உதவியுடன் யாருக்கும் தெரியாமல் நிலத்தை அளவீடு செய்ததாகவும், அப்போது திரு.எஸ்.பிரகாஷ்குமார் என்பவருக்கு 1119.5 சதுர அடி பரப்பளவு கொண்ட இடம் பட்டாப்படி பாத்தியப்பட்டதாகவும் அதில் ஆக்கிரமிப்புகள் ஏதுமில்லை என 08.07.2021–ம் தேதி ஓர் அறிக்கையினை கொடுத்துள்ளார்.

மேற்கண்ட 08.07.2021–ம் தேதியிட்ட அறிக்கை தவறானது. ஒரு சாராருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட அளவீடு கீழ்க்கண்ட காரணங்களின் அடிப்படையில் சரியானதல்ல.

- மேற்படி கிராமம் க.ச.எண்கள் 364 மற்றும் 365 ஐ அளவு செய்து ஆக்கிரமிப்புகள் எவை எவை என ஆய்வு செய்யப்படவில்லை.
- மேற்படி க.ச.எண்.364–ன் எல்லைக்குள் அரசு நிலத்தில் உள்ள போர்வெல் எந்த இடத்தில் உள்ளது எனக் கண்டறியப்படவில்லை.
- போர்வெல் ஏன் யாரால் மூடப்பட்டது என்பதும் கண்டறியப்படவில்லை
- மேற்படி க.ச.எண்.364–ல் போர் கிணற்றில் தண்ணீர் எடுக்கச்சென்றாலோ அல்லது மோட்டார் பொருத்தச் சென்றாலோ அதற்கான வழி ஏதுமில்லை என்பதை 1–ம் எதிர்மனுதாரர் வசதியாக மறைத்துள்ளார்.
- க.ச.எண்.364 மற்றும் க.ச.எண்.365 ஆகிய நிலங்களில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு செல்ல க.ச.369 வழியாக உள்ள வண்டிப்பாதை வழியாக சென்று வந்து கொண்டிருந்தனர். ஆனால் தற்போது மேற்படி க.ச.எண்.369/1B) புதிய க.ச.எண்.672/13–ல் வீடு கட்டும் எஸ்.பிரகாஷ்குமார் மற்றும் சிலர் வண்டிப்பாதையையும், மழைநீர் குட்டைக்கு செல்லும் பாதையை ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி வருகின்றனர்.

- இதனால் உருமாண்டம்பாளையம் ஊர்பொதுமக்கள் குட்டை பகுதிகளுக்கு செல்ல முடியாத நிலையிலும் க.ச.364—ல் உள்ள போர்வெல் கிணற்றை புனரமைக்க முடியாத நிலையிலும் உள்ளனர்.

மேற்படி 1—ம் எதிர்மனுதாரர் வழங்கிய 08.07.2021—ம் தேதியிட்ட கடிதம் ஒருதலைபட்சமானது. எனவே மேற்படி அறிக்கை சட்ட முரணானது.

எனவே 1984—ஆம் ஆண்டுக்கு முன்பு வெள்ளக்கிணறு கிராமம் க.ச.எண்.364 மற்றும் 365 ஆகிய அரசு நிலங்களில் அத்துமீறி நுழைந்து பொதுமக்கள் மழைநீர்க்குட்டையை அடைத்து இடையூறு செய்து கொண்டுள்ள ஆக்கிரமிப்புக்களை அகற்றிட வேண்டுமென எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிடவேண்டுமாய் தங்களது ஆணையத்தை பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை கோரி கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி நகரமைப்பு அலுவலர் ஆகியோருக்கு இம்முறைமன்ற 20.12.2021 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவ 27.01.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் 14.02.2022 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.

மனுதாரர் 14.02.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

" கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட கோயம்புத்தூர் வடக்கு வட்டம் வெள்ளக்கிணறு கிராமம் சர்வே எண். 364—ல் மழைநீர் தேங்கும் குட்டை உள்ளது. திரு.பிரகாஷ்குமார் என்பவர் தனக்கு சொந்தமான பட்டா இடத்தில் வீடு கட்டும்போது மேற்கண்ட குட்டையின் வண்டிப்பாதையையும் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளார். இதனால், குட்டைக்கு செல்ல முடியாது. குட்டையை பராமரிக்கும் பணி நடக்கும்போது மேற்கண்ட ஆக்கிரமிப்பு இடையூறாக இருக்கும். இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் ஆகியோருக்கு புகார் மனுக்களை அனுப்பியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே மேற்கண்ட இடத்தில் தனியாரால் ஆக்கிரமித்துள்ள வண்டிப்பாதை ஆக்கிரமிப்பை அகற்றிட ஆவண செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூர் மாநகராட்சி செயற்பொறியாளர்(திட்டம்) தனது 11.02.2022 நாளிட்ட கடிதத்தில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ விசாரணைக்கு 14.02.2022—ல் உரிய ஆவணங்களுடன் விவர அறிக்கையுடனும் நேரில் வருகை தந்து விளக்கம் அளிக்க ஆணையிடப்பட்டது. தற்போது கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ளாட்சி தேர்தல் பணிகளில், செயற்பொறியாளர்(திட்டம்) சம்மந்தப்பட்ட பொருள் தொடர்பான வடக்கு மண்டல உதவி செயற்பொறியாளர்(திட்டம்) ஆகியோர், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களாக நியமிக்கப்பட்டு பணிகளை மேற்கொண்டு வருவதால், குறிப்பிட்ட 14.02.2022ம் தேதியன்று ஆஜராக இயலாத நிலை ஏற்பட்டுள்ளதை தெரிவித்து, மேற்கண்ட விசாரணையினை வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்குமாறு கேட்டுக்கொண்டதை தொடர்ந்து, மறு விசாரணை 24.02.2022 அன்று ஆஜராகுமாறு முறைமன்ற நடுவ 17.02.2022 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

24.02.2022 அன்றைய நேரடி விசாரணையில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் செயற்பொறியாளர்(திட்டம்) ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட வெள்ளக்கிணறு கிராமம் சர்வே எண்.364–ல் அமைந்துள்ள மழைநீர் தேங்கும் குட்டையில் திரு.பிரகாஷ் என்பவர் வீடு கட்டும்போது குட்டையின் வண்டிப்பாதையையும் ஆக்கிரமித்து தனது வீட்டை கட்டியுள்ளார். அனுமதியின்றி கட்டப்பட்டு வரும் கட்டிடத்திற்கு சட்டவிதிகளின்படி வழங்கப்பட்ட நோட்டீஸ் வழங்கியதைத் தொடர்ந்து, மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மேற்கண்ட வண்டிப்பாதை ஆக்கிரமிப்பு வருவாய்த்துறைக்கு சொந்தமான நிலத்தில் உள்ளதால், வருவாய்த்துறையை கலந்து பேசி உரிய சட்டவிதிகளை பின்பற்றி இன்னும் 45 நாட்களுக்குள் ஆக்கிரமிப்பு அகற்றப்படும் என இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்"என கூறியுள்ளார்.

மேலும் செயற்பொறியாளர்(திட்டம்) கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்கள் அனுப்பியுள்ள கூடுதல் வாக்குமூலத்தில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், வார்டு எண்.43. வெள்ளக்கிணறு கிராமம், உருமாண்டம்பாளையம், உழைப்பாளர் வீதி, நில அளவை எண். 672/13(புதியது)/369/B(பழையது)–ல் தரைதளத்துடன் கூடிய கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. இந்த மனையிடம் கோயம்புத்தூர் வடக்கு, நத்தம் நிலவரி திட்டம், வட்டாட்சியர் அலுவலகத்தில் வழங்கப்பட்ட மனைவரி பட்டா அடிப்படையிலும் கிரைய பத்திர மூலமும் கட்டிட உரிமையாளர் பெற்ற இடமாகும். இந்த மனையிடத்தினை சர்வே செய்ததில் குட்டை புறம்போக்கில் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை. வண்டிப்பாதை புறம்போக்கு நிலத்தில் கட்டிட ஆக்கிரமிப்பு கண்டறியப்பட்டுள்ளது. மாநகராட்சி அனுமதியின்றி கட்டப்படும் இந்த தரைதள கட்டுமானத்திற்கு கோவை மாநகராட்சி சட்டம் 1981 பிரிவு 296(1), (2) மற்றும் 296(3)–ன் கீழ் அறிவிப்புகள் வழங்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக கோவை குற்றவியல் நீதிமன்றத்தில் குற்ற அறிக்கை பதிவு செய்ய குற்ற அறிக்கை தயார் செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் மாநகராட்சி தொடர்பான இதுபோன்ற குற்ற அறிக்கைகள் தாக்கல் செய்தல் மற்றும் விசாரணை செய்தல் தொடர்பாக நீதிமன்ற எண்(court hall number) இதுவரை முடிவு செய்யப்படவில்லை என நீதிமன்ற வழக்கறிஞர் தெரிவித்துள்ளார். எனவே மேற்படி வழக்கு நீதிமன்ற எண் முடிவான பின்பு உரிய தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், கோயம்புத்தூர் மாநகராட்சி செயற்பொறியாளர்(திட்டம்) அவர்களின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவைகள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு பின்வரும் விபரங்கள் கண்டறியப்பட்டுள்ளன:

இந்நேர்வில், திரு.பிரகாஷ்குமார் என்பவர் தனக்கு சொந்தமான பட்டா இடத்தில் வீடு கட்டும்போது மழைநீர் தேங்கும் குட்டைக்கு செல்லும் வண்டிப்பாதையையும் ஆக்கிரமிப்பு செய்து அனுமதியின்றி வீடு கட்டியுள்ளார். இது நிர்வாக சீர்கேட்டையே காட்டுகிறது. மேற்கண்ட வண்டிப்பாதை ஆக்கிரமிப்பு வருவாய் துறைக்கு சொந்தமான இடம் என்பதால் வருவாய் துறையின் சம்மந்தப்பட்ட அலுவலர்களுடன் மாநகராட்சியின் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் கலந்து பேசி உரிய சட்டவிதிகளுக்குட்பட்டு மாநகராட்சி செயற்பொறியாளர் 24.02.2022 அன்றைய நேரடி விசாரணையில் அளித்துள்ள உறுதிமொழிப்படி 45 நாட்களுக்குள் ஆக்கிரமிப்பை அகற்றிட மாநகராட்சி அலுவலர்களை அறிவுறுத்தவும்

மாநகராட்சி ஆணையாளருக்கு பரிந்துரை செய்தும் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. எம்.தேவேந்திரன்,
   த/பெ. லேட். மாரப்பகவுண்டர், 9/29, ஜீவா வீதி,
   உருமாண்டம்பாளையம்,
   கோயம்புத்தூர் – 641 029.
2. ஆணையர்,
   கோயம்புத்தூர் மாநகராட்சி,
   டவுன் ஹால், ராஜா வீதி,
   கோயம்புத்தூர் – 641 001.
3. செயற்பொறியாளர்(திட்டம்)
   கோயம்புத்தூர் மாநகராட்சி,
   டவுன் ஹால், ராஜா வீதி,
   கோயம்புத்தூர் – 641 001.
4. இணை இயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்